ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஒன்பது

உறுப்பினர்களை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டிருக்கும். அதிமேதகு ஜனாதிபதியினால் அரசியலமைப்பு பேரவையின் சிபாரிசின் பேரில் அந்த உறுப்பினர்கள் ஒன்பது பேர்களுள் ஒருவர் தலைவராக நியமிக்கப்படுவார். மூன்று வருட காலப்பகுதிக்கு அவர்கள் தங்களது பதவியை வகிப்பதுடன் மேலும் அது போன்ற காலப்பகுதி ஒன்றுக்கு நியமிக்கப்படுவதன் பொருட்டு தகுதியுள்ளோர் ஆவர். இந்த உறுப்பினர்கள் நிருவாக, கல்விசார், மற்றும் உயர்தொழில் சார் அனுபவத்தையும் நிபுணத்துவத்தையும் கொண்ட பரந்த தொகுதியொன்றை இந்த உறுப்பினர்களினால் பிரதிநிதித்துவப்படுத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.

17ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் தாபிக்கப்பட்ட முதலாவது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பதவிக்காலம் 2005 டிசம்பர் 01ஆம் திகதியுடன் முடிவடைந்ததுடன், இரண்டாவது அரசாங்க சேவை ஆணைக்குழுவானது அதிமேதகு ஜனாதிபதியினால் 2006.04.10ஆம் திகதியன்று நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் 2006.04.18ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமானது. அரசியலமைப்பின் 55 (5)ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழு 2008 டிசம்பர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குரிய தனது அறிக்கையை பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கின்றது.

2. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பொறுப்புகள்

இலங்கை சனநாயகசோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் மாகாண சபைகளில்சேவையாற்றுகின்ற அகில இலங்கை சேவைகளிலுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களினதும் ஏனைய சகல அரசாங்க உத்தியோகத்தர்களினதும் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்றுக்கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கங்கள் ஆகியவற்றுக்கான அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை சேவைகளைச் சாராத மாகாண அரசாங்க சேவையில் சேவையாற்றும் சகல உத்தியோகத்தர்கள் சம்பந்தமான நடவடிக்கைகள் அந்தந்த மாகாண சபைகளின் ஆளுநர்களினால் அல்லது அந்தந்த ஆளுநர்களினால் நியமிக்கப்படும் அரசாங்க சேவை ஆணைக்குழுக்களினால் மேற்கொள்ளப்படும். அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டமுறைச் சபைகள் மற்றும் அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகள், ஆகிய நிறுவனங்களின பணியாளர்கள் அரசியலமைப்பின் அர்த்தத்திற்குள் அரசாங்க உத்தியோகத்தர்கள் அல்லாதவர்களாக இருப்பதனால் அந்த நிறுவனங்கள்

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகார எல்லைக்குட்பட்டவைகள் அல்ல. மேலும் நீதிச் சேவை ஆணைக்குழுவினாலும்தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினாலும் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நோக்கெல்லைக்கு உட்பட்டவர்களல்லர்.

அரசாங்க சேவை ஆணைக்குழு, 2003.06.27ஆம் திகதியுடைய இல: 1295.˙.26 மற்றும் 2003.07.03ஆம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டுள்ள தத்துவங்கள் கையளிக்கப்படும் நடைமுறைகளின்

பிரகாரம் "பதவிநிலை சாராத தரங்களுக்குரிய உத்தியோகத்தர்கள்" தொடர்பில் அதற்கு வழங்கப்பட்டுள்ள த்ததுவ்களைச் செயற்படுத்தும் அதிகாரம் உரித்துடைய நிறுவனத் தலைவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள போதிலும், 2006.04.25 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட அரசாங்க நிருவாக சுற்றுநிருப இலக்கம்: 06.:.2006 கொண்ட சம்பள சுற்று நிருபத்தில்

குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுகள் காரணமாக "பதவிநிலை சாராத உத்தியோகத்தர்கள் எனும் பொருள் கோடலுள் சிக்கலொன்று ஏற்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம், முன்னர் பதவிநிலைத் தரங்களுக்குரிய உத்தியோகத்தர்கள் நிலைக்குட்படுத்தப்படாத உத்தியோகத்தர்கள், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள புதிய சம்பள அளவுகள் காரணமாக தற்போது பதவிநிலை தரங்களுக்கு உட்படுகின்றனர். இதன் பெறுபேறாக அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டபின்னரும் சில "பதவிநிலை சாராத உத்தியோகத்தர்கள்" சம்பந்தமான நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் சேவை நீக்கம் போன்றவற்றுக்கு உரித்துடை முறைப்பாடுகள் தேவையான நடவடிக்கைகளுக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிப்பதன் காரணமாக அதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளின் அளவு பரவலான நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஆயினும் அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனம், பதவிநீக்கம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கான அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் பின்வரும் மிக முக்கியமான உத்தியோகத்தர்கள் விடயத்தில் உரித்துடையதாக மாட்டாது. அதாவது,

- ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் அமைச்சுக்களின் செயலாளர்கள்
- அமைச்சரவையினால் நியமிக்கப்படும் திணைக்களத் தலைவர்கள்

அவ்வாறாயினும், மேற்குறிப்பிடப்ப ட்ட இரண்டாவது உத்தியோகத்தர் தொகுதியான திணைக்களத் தலைவர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் போது ஆணைக்குழுவின் கருத்து வினவப்பட்டு அந்த அதிகாரங்களை பிரயோகிப்பதற்கு அமைச்சரவையானது அரசியலமைப்பு ரீதியாக கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

பின்வரும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்ததாக ஆணைக்குழுவின் தீர்மானங்களை எந்தவொரு

நீதிமன்றத்திலோ அல்லது நியாய சபையிலோ வாதிட முடியாது.

(ெ) அடிப்படை உரிமைகள் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்தல். மற்றும்

(ே) அரசியலமைப்பின் 59 (1) உறுப்புரை மற்றும் 17 ஆவது திருத்தத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட நிருவாக மேன்முறையீடு நியாய சபைக்கு முறைப்பாடு செய்தல்.

3. அரசாங்க சேவை பாது ாய்வு
ஆணைக்குழுவின் பணிகளின்ே மள்ா

சுதந்திரமான நிறுவனமொன்றாக செயற்படும் இவ்வாணைக்குழு அரசாங்க சேவை நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் சம்பந்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது அரசியல் செல்வாக்கு இல்லாது உத்தியோகத்தர்களின் சேவை மூப்பையும் திறமைகளையும் கவனத்திற் கொண்டு அந்த நடவடிக்கைகள் கடந்த ஆண்டுகளில் போன்றே 2008ஆம் ஆண்டிலும் தெளிவாகத் தெரியும் தன்மையுடன் நிறைவேற்றியுள்ளது. அரசாங்க சேவையில் தரங்களை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு விசேடமாக அரசாங்க சேவையின் உயர் முகாமைத்துவ மட்டத்திலான பதவிகளுக்கு நியமித்தல் மற்றும் பதவி உயர்வு ப்படும்போது.. மீள்திருத்தம் நடைமுறைகள் அங்கீகரிக்க செய்யப்படும் போது கல்விசார், தொழில்சார் தகைமைகளுக்கும் அனுபவங்களுக்கும் கூடுதலான முக்கியத்துவம் அளிக்கப்படும் வகையில் அரசாங்க சேவை ஆணைக்குழு செயற்பட்டுள்ளது.

நேர்மையிலும் நடத்தையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்களை மீறிய அரசாங்க உத்தியோகத்தர்களைத் தண்டிக்கும் முயற்சிகளும் தொடரப்பட்டன. இந்நோக்கத்தை அடைவதற்கான வழிவகையாக நடைமுறைகளையும் வழிகாட்டல்களையும் ஒழுங்கமைக்கும்தனது சிறப்புப் பணிகளை நிறைவேற்றுவதை அரசாங்க சேவை ஆணைக்குழு தொடர்ந்தும் செய்து கொண்டிருக்கின்றது.

அரசாங்க சேவையில் நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் போன்றே சம்பந்தப்பட்ட பிற விடயங்கள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் 1ஆம் பகுதிக்காக இவ்வாண்டில் மாண்புமிகு சட்டமா அதிபரின் அவதானிப்புகள் பெற்றுக் கொள்ளப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அந்த விதிக் கோவை தற்போது ப்படுவதன் பொருட்டு தற்போது நடவடிக்கை அங்கீகரிக்க எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை விதிக் கோவையின் ஐஐஆம் பகுதியாக வெளியிடப்படவுள்ள விதிக்கோவை வரைவு தயாரித்தலும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதிக் கோவையின் ஐஆம் பகுதி கிட்டிய திகதியொன்றில் வெளியிடப்படுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நிபுணர்கள் குழுவொன்றினால் தயாரிக்கப்பட்ட வரைவாக தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதன் ஐஐஆம் பகுதி ஆய்வுக்குட்படுத்துவதன் பொருட்டு இவ்வாண்டில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் அரசாங்க சேவை ஆணைக்குழுவானது அதன் செயலாற்றுகையில் பாதகமான விளைவுகளை எதிர்கொண்ட அலுவலக இடவசதி பற்றாக்குறைப் பிரச்சினையும் வெற்றிகரமாக தீர்த்து வைக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2008.03.31 ஆம் திகதி வரை கொழும்பு 02, வொக்சோல் வீதியில் 46ஆம் இலக்க இடத்தில் அமைந்திருந்த அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம் 2008.04.01ஆம் திகதி தொடக்கம் கொழும்பு 03, காலி வீதியில் கால்வீல் இடத்தில் 356 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கூடுதலான இடவசதிகொண்ட கட்டிடத்துக்குக் கொணர்டு செல்லப்பட்டது.

அரசாங்கசேவை ஆணைக்குழு அலுவலகம் பேணப்பட்டு வந்த பழைய கட்டிடத்தில் இடவசதி போதுமானதாக இல்லாமை காரணமாக

தேவையான ஆகக் குறைந்த பணிக்குழுவினரை சேவையில் அமர்த்த முடியாமல் இருந்தமையானது, பல வருடங்களாக ஆணைக்குழுவின் செயலாற்றுகையை மிகவும் பாதித்த விடயமொன்றாகும்.

அக்குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு 2008.04.01ஆம் திகதி தொடக்கம் அரசாங்க சேவை ஆணைக்குழு இடவசதி கொண்ட புதிய கட்டிடமொன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டதன் காரணமாக, பதவியணியினரின் தேவைப்பாடுகளை உரிய முறையில் இனங்கண்டு உரித்துடைய பணிக்குழுவினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு இயன்றுள்ளது.

2001ஆம் ஆண்டில் சுதந்திரமான அரசாங்க சேவை ஆணைக்குழு தாபிக்கப்பட்டதுடன், அப்போதைய அரசாங்க நிருவாக அமைச்சின்செயலாளரின் பணிப்பின் பிரகாரம் செயற்பட்ட தாபன பணிப்பாளர் நாயகத்தினால் நிறைவேற்றப்பட்ட கருமங்களுள் பெருமளவிலானவை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பொறுப்பேற்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும், பல்வேறு காரணங்களினால் அந்த விடயங்கள் முறையாக ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தத் தேவைப்பாடுகள் பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழு 2008ஆம் ஆண்டில்விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன், தாபனப் பணிப்பாளர் நாயகத்தினால் தற்போது நிறைவேற்றப்படும் கருமங்களை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் நிறைவேற்றும் நோக்கில் 2008ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் புதிய மேலதிக செயலாளரொருவரின் கீழ் "தாபனப் பிரிவு" அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு, இவ்வாணைக்குழுவின் நடவடிக்கைகள்மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்திய அலுவலக இடப் பற்றாக்குறை மற்றும் போதுமான அளவில்பதவியணியினர் இல்லாமை போன்ற பிரச்சினைகளை வெற்றிகரமாக தீர்த்துக் கொள்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் (அலுவலக இடம் பற்றாக்குறையை முழுமையாகவும் பதவியணியினர் பற்றாக்குறை ஓரளவிற்கும்) இவ்வாண்டில் இயன்றுள்ளது. அதன் பிரகாரம் 2008ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது சிறந்த சேவைகளை வழங்கக் கூடியதாக இருந்ததென அரசாங்க சேவை ஆணைக்குழு அறிவிக்கின்றது.

4. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் டும்போது பணிகள் நிறைவேற்றப எதிர்கொள்ளப்பட்ட சவால்கள்

4.3 பணிக்குழுவினர் போதுமானதாக இல்லாமை

□ 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் ஒப்படைக்கப்பட்ட தத்துவங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது எதிர்கொள்ளப்பட்ட முக்கியமான சவாலாக பணிக்குழுவினர் போதுமானதாக இல்லாமையைக் குறிப்பிட்டுக் காட்ட முடியும். ப்பட்ட பதவியணி உத்தியோகத்தர் அங்கீகரிக்க பதவிகளுக்குப் போன்றே அரசாங்க முகாமைத்துவ சேவைப் பதவிகளிலும் நிலவிய வெற்றிடங்கள் மற்றும் அலுவலக சிற்றூழியர்கள் சேவைப் பதவிகள் பூர்த்தி செய்யப்படாமை காரணமாக கடமைகள் நிறைவேற்றப்படும்போது அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு பல்வேறு கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும்,

பணிக்குழுவினர் அனைவரினதும் அர்ப்பணிப்பினாலும் தீவிர முயற்சியினாலும்அச்சவால்களை பெருமளவில் தீர்த்துக் கொள்ளக் கூடியதாக இருந்தன என்பதனைக்குறிப்பிட்டாக வேண்டும். அதே போன்று இவ்வாண்டில் புதிதாக உருவாக்கப்பட வேண்டிய 30 பதவிகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால்கண்டறியப்பட்டு அப்புதிய பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு விண்ணப்பங்கள் ்பிக்கப் பட்டுள்ளன. 2008ஆம் ஆண்டில் சம அந்த 30 ர்ப பதவிகளுள் 18 பதவிகளுக்கு மட்டும் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்தன.

4.4 ட்ட அதிகாரத்தைப் ம் ளிடம் கையளி பர்யோகிகக்கு உத்தியோகத்த இருந்து க்கப்ப ரக்

பெறப்படத் அறிக்கைகள் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் தகக

□ தீர்மானமெடுப்பதன் பொருட்டு தேவையான அறிக்கைகள், அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட அமைச்சு.் திணைக்களங்களின் தலைவர்களிடமிருந்து உரிய நேரத்தில் கிடைக்காமையின் காரணமாக ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் வினைத்திறனாக நிறைவேற்றப்படுவதற்கு தடைக்கல் ஏற்பட்டுள்ளமை மீளாய்வுக்குட்பட்ட ஆணைடில் அவதானிக்கப்பட்டுள்ளது. அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்களது கோரிக்கைகள்.் மேன்முறையிடுகளை உரிய திணைக்களத் தலைவரக் ளின் ஊடாக வேண்டும் அனுப்ப என்பதுடன் அக்கோரிக்கைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு மிகவும் தாமதமாக கிடைக்கும் சந்தர்ப்பங்கள் அறிய வந்துள்ளன. இதன் காரணமாக தீர்வொன்று கோரி விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களுக்கு தீர்வு வழங்குதல் தாமதமாகிய சந்தர்ப்பங்கள் அறிய வந்துள்ளது. இந்த நிலைமைக்கு தீர்வொன்றாக தமது திணைக்களத் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் முன்னோடிப் க

பிரதியொன்று ஆணைக்குழு அலவலகத்துக்கு அனுப்புவதற்கு ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அவ்வாறான முன்னோடிப்பிரதி கிடைக்கப் பெற்ற பின்னர் அது பற்றி உரித்துடைய அமைச்சின் செயலாளரிடமிருந்து அறிக்கைகளைக் கோரும் வேலைத்திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அவ்வாறு அறிக்கைகள் கோரப்பட்ட போதிலும் அமைச்சின் செயலாளர்களின் அவதானிப்புகள்.் விதப்புரைகள் கிடைப்பது பெருமளவில் தாமதமாகும் சந்தரப்பங்களும் அறிய வந்துள்ளது.

இத்தாமதங்கள் பற்றிய விவரம் பின் இணைப்பு 01இல் காண்பிக்கப்பட்டுள்ளன.

4.10 ாற்று வீடயங்களில் ஏற்படும் தாமதங்கள் ஒழுக்க

□ முறையான ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்படும் போது முறைப்பாட்டைக் கையாளும் உத்தியோகத்தர்கள் உரிய ஒழுக்காற்று விசாரணைகளில்

பங்குபற்றுவதற்கு முன்னுரிமை வழங்குவதற்குக் கவனம் செலுத்தாமை காரணமாக உரிய விசாரணை நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ள சந்தர்ப்பங்கள் இவ்வாண்டிலும் காணக் கூடியதாக இருந்தன.

- தாபன விதிக்கோவை ஒழுக்காற்று விடயங்களின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்படுவதற்குரிய மிக முக்கியமான படிநிலையானது முறையான "ஆரம்ப விசாரணையொன்று" நடாத்துவதாகும். எனினும் அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் பெரும்பான்மையினருக்கு தாபன விதிக்கோவையின் ஐஐஆம் தொகுதியில் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய முறையில் ஆரம்ப விசாரணையொன்று நடாத்தக் கூடிய திறமை அல்லது அநுபவம் இல்லாமை காரணமாக பெரும்பாலான சந்தரப்பங்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் ஆரம்ப விசாரணை அறிக்கைகளில் குறைபாடுகளைப் பூரணப்படுத்தி அனுப்புவதன் பொருட்டு உரித்துடைய அதிகாரிகளுக்கு திருப்பி அனுப்ப வேண்டியதாக உள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் பெருமளவில் தாமதமாகின்றது.

  சில சந்தர்ப்பங்களில் காலம் பிந்துவதனால் ஆரம்ப விசாரணைக்குத் தேவைப்படும் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய இயலாமை, சாட்சிகளை வரவழைக்க இயலாமை போன்றவை காரணமாக உரித்துடைய ஒழுக்காற்று நடவடிக்கைகள் முழுமையாக விட்டு விடப்பட வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடப்படுதல் வேண்டும்.

இதன்பிரகாரம் அரசாங்க சேவையில் சிறந்த ஒழுக்கம் பேணப்படுதற்காக ஆரம்ப விசாரணை நடாத்தும் செயற்பாடுகள் வலுவூட்டப்பட வேண்டிய தேவைப்பாடு நிலவுகின்றது. அதன் பிரகாரம் அரசாங்க துறையில் நடுத்தர மற்றும் உயர் முகாமைத்துவ மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஆரம்ப விசாரணை நடாத்துவதற்கு ஏற்ற முறையில் உரிய பிரயோகப் பயிற்சியொன்று (கூடுதலான உத்தியோகத்தர்களுக்கு ஏற்கனவே கொள்கை சார் அறிவு இருப்பதன் காரணமாக) வழங்கப்படுதல் மிகவும் விசேடமானகாலத்துக்கேற்ற தேவைப்பாடொன்று எனச் சுட்டிக் காட்டப்பட வேண்டியுள்ளது.

4.11 ட்ட அதிகாரத்தைப் பிரயோகிக்கும் கையளி உத்தியோகத்தர்களினால் க்கப்ப

சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் ம மற்றும் குறைபாடுகள் பூரணமின்மை உள்ளமை காரணமாக ஏற்படும் தாமதங்கள்

- அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கையளிக்கப்படும் அதிகாரத்தின் கீழ் செயற்படுகின்ற உத்தியோகத்தர்கள், தாபன விதிக்கோவை ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், சுற்றறிக்கை அறிவுரைகள், ஆணைக்குழுவின் கட்டளைகள், பொதுச்சட்டம் மற்றும் இயற்கை நீதியின் அடிப்படை விதிகள் ஆகியவற்றின் மது

உரிய கவனம் செலுத்தாமல் சமர்ப்பிக்கும் பூரணமற்ற அறிக்கைகள் மீண்டும் அந்த உத்தியோகத்தர்களுக்கு சில சந்தரப்பங்களில் பல முறைகள் திருப்பி அனுப்பிப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியுள்ளதால் ஆணைக்குழுவின் தீர்மானங்கள் வழங்கப்படுவதனைத் தாமதப்படுத்த வேண்டியுள்ளது.

4.12 தரவுத்தளம் ஒன்று இல்லாமை

□ அரசாங்கசேவையில் ஓர் கணனி வலையமைப்பை அமைப்பதற்கும் தகவல் தொழில் நுட்பத்தை ்துவதற்கும் பெருமளவு பணம் தரமுயரத்து முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், இதுவரை அரசாங்க உத்தியோகத்தர்கள் பற்றிய சரியான தரவுகள் அமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கு பயனுள்ள நடவடிக்கைகள்எதுவும் எடுக்கப்படவில்லை. அவ்வாறான சரியான தரவுகள் அமைப்பொன்று இல்லாமை காரணமாக அரசாங்க உத்தியோகத்தர்களின் சுயவிபரக்கோவை ஒவ்வொன்றையும் பார்வையிடாமல், தற்போதுள்ள உத்தியோகத்தர்களின்எண்ணிக்கை, சேவை, தரம்.்வகுப்பு, நியமனத் திகதி, ஓய்வுபெறும் திகதி, ஒழுக்காற்று நடவடிக்கைகள்மற்றும் அவர்களுக்கு உரிய வேறு தகவல்களை சரியாகத் தெரிந்து கொள்வது மிகவும் கஷ்டமாகவுள்ளது. இந்த சுயவிபரக் கோவைகள் அந்தந்த செயலாளர்கள் ளின் அல்லது திணைக்களத் தலைவரக் கட்டுப்பாட்டிலுள்ளன. ஆகையால் யாரேனும் அரசாங்க உத்தியோகத்தரின் தகவல்களை அறிந்து கொள்வதற்காக உரித்துடைய செயலாளர் அல்லது திணைக்களத் தலைவரிடம்தேவையான விபரங்களைக் கோர வேண்டிய செயல்முறையொன்று இவ்வாண்டிலும் பின்பற்றப்பட வேண்டிய தேவை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டுள்ளது. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ஊடாகப் பெற்றுக் கொள்வதில் நீண்டகால தாமதம் ஏற்படுவதன் காரணமாக அக்குறைபாடு காரணமாக ஆட்சேர்ப்பு அல்லது பதவி உயர்வுகள் வழங்குவதன் மூலம் வெற்றிடங்களை நிரப்புவதிலும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளல், ஒழுக்காற்றுச் செயற்பாடுகளைத் தொடர்ந்து

பேணல் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களை ல் ஓய்வு பெறச் செயத போன்ற விடயங்களில் நீண்டகாலத் தாமதம் ஏற்படுகின்றது. ஆகையால் சகல அரசாங்கஉத்தியோகத்தர்கள்∴ பணியாட்கள் சம்பந்தமான விபரங்களடங்கிய முறையான தரவுத் தளமொன்றைத் தாபிப்பதன் பொருட்டு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், அத்தரவுத் தொகுப்புக்கு தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நுழைவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு இயலக் கூடியதாக இருத்தல் வேண்டும் எனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவானது மேலும் பலத்த சிபாரிசு செய்கின்றது.

4.13 நிருவாக மேன்முறையீட்டு நியாய சபை உட்பட வெளி நிறுவனங்கள் தொடர்பான ள் உத்தியோகத்தர்களைப் விடய ம பயன்படுத்த ங்க து நேரிடுதல்

மற்றும் வெளிநிறுவனங்களிடமிருந்து தேவையான சேவைகளைப் பெற்று க் கொள்வதிலுள்ள கஷ்டங்க ள்

- நிருவாக மேன்முறையீட்டு நியாய சபை முன் அரசாங்க சேவை ஆணைக்குழு சார்பில் முன் தோற்றுவதன் பொருட்டு வாரமொன்றக்கு விடுவிக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையில் மாற்றங்கள் இவ்வருடத்திலும் காண்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் இவ்வருடத்திலும் உரித்துடைய விடயங்களுக்கு 03 – 05 இடைப்பட்ட எண்ணிக்கை கொண்ட உத்தியோகத்தர்கள் தினந்தோறும் ஈடுபடுத்தப்பட வேண்டியிருந்தது.

- சட்டமாஅதிபர் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர்களின் சேவைகளை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்குப் பெற முடியாமையும் தனியார் சட்டத்தரணிகளின்சேவையை நிதியங்கள் இல்லாமை காரணமாக தேவையான சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வேலைகளுக்குத் தடையாக இருந்துள்ளது.

4.14 பாராளுமன்ற மனுக்கள் குழு போன்ற ளின் வெளிவாரி நிறுவனங்க கடமைகளு க்கு உத்தியோகத்தர்களை ப்படுகின்றமை ஒதுக்குவதற்கு நிர்ப்பந

- அரசியலமைப்பிற்கு 17 ஆவது திருத்தம் அமுலாக்கப்பட்டதன் பின்னரும், பாராளுமன்ற மனுக்கள் குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, பாராளுமன்ற நிருவாக ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) ஆகியோருக்கு செய்யப்பட்ட முறைப்பாடுகள் சம்பந்தமாக அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் அவ்விசாரணைக் குழு முன்னிலையில் முன் தோன்றுவதற்கு ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களை அனுப்ப வேண்டியிருப்பதுடன் இவ்வருடத்திலும் சில தினங்களில் குறித்த வெளிவாரி நிறுவனங்களின் கடமைகளுக்கு கூடுதலான எண்ணிக்கையான உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த வேண்டிய சந்தர்ப்பங்கள் இருந்தன என்பதும் குறிப்பிடப்பட வேண்டியுள்ளது.

4.15 நேர்முகப் பரீட்சை சம்பந்தமான ஆவணங்கள் சமர்ப்பிக

எ
ப

· பொழுதும் நிகழும் குறைபாடுகள் ப்படும்போது கையளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் செயற்படும் உத்தியோகத்தர்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிறுவனங்களில் வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது புள்ளிகள் வழங்கும்நடைமுறைகள் மற்றும் நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு ஆணைக்குழுவின் முன் அங்கீகாரம்பெற்றுக் கொண்டு செயற்பட வேண்டும். எனினும், அவ்வாறு முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் செயலாற்றியுள்ள இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவின் அங்கீகாரம் இல்லாமல் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் நியமனம், சரியான

முறைப்படியாக்குவதற்கு சட்ட ரீதியான தடைகள் காரணமாகவும், தவறான வழிகாட்டல்கள் எழக் கூடிய வாய்ப்புகள் இருப்பதனாலும் முடியாமல் உள்ளது.

4.16 அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் அரசாங்க சேவைஆணைக்குழுவின் ாற்றுக் ாட்டிற்கு ஒழுகக் கட்டு உட்படுத்தப்படாமை பப

- அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்படாமல் இருப்பதன் நிமித்தம் அவர்கள் மூலமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வழிகாட்டல்களையும் தீர்மானங்களையும் துரிதமாக நடைமுறைப்படுத்துவதில் பல சந்தர்ப்பங்களில் தாமதங்கள் ஏற்படுவது காணக்கூடியதாக உள்ளது.
- அரசாங்க சேவை மற்றும் பதவி ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்பு உயர்வு சம்பந்தமாக தெளிவான நடைமுறைகள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதற்கும், அரசாங்க சேவை ப்பட்ட ஆணைக்குழுவினால் அங்கீகரிக புள்ளிகள் வழங்கும் முறைமைகளும் நேர்முகப் பரீட்சைக் குழுக்களைப் பயன்படுத்துவதற்கும் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் தவறிய பல சந்தர்ப்பங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. சில சந்தர்ப்பங்களில் அவ்வாறான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு சம்பந்தமான சகல நடைமுறைகளையும் செயலற்றவையாக்குவதற்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு கட்டாயப்படுத்தப்படுகின்றது.

4.10 உயர் மன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்ப ட வேண்டிய நத் அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்காக உத்தியோகத்தர்களின் கடமை நேரங்களில் பெருமளவு நேரத்தைச் வேண்டிய கட்டாய டல் செலவழிக நிலைக்கு உட்படுத்தப்ப

- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு

சவால் விடுக்கப்பட்டு உயர் நீதிமன்றத்துக்கு
சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் சம்பந்தமாக அரசாங்க சேவை
ஆணைக்குழு உத்தியோகத்தர்கள்
துரிதமாக அறிக்கை தயாரிக்க வேண்டியுள்ளது.
இப்பணிகள் சட்ட மாஅதிபர்
திணைக்களத்துடன்
கூட்டிணைக்கப்படவும் வேண்டியுள்ளன. இவ்வாறான
விடயங்கள் சம்பந்தமாகவும் உத்தியோகத்தர்களின் கடமை
நேரம் ஈடுபடுத்தப்பட வேண்டியுள்ளமை அவர்களது நாளாந்த
கடமைகளைப் பின்னடையச்
செய்வதற்கும் காரணமாக
உள்ளமை
கண்டறியப்பட்டுள்
ளது.

4.11 மன்றத்தின் முன்னிலையில் விசாரிக்கப்படும் ள் சம்பந்தமாக
ந விடயங்க
த்
தீர்மானம் வழங்குவதற்கு தாமதங்கள் ஏற்படுகின்றமை

□ நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரிக்கப்படும் விடயங்கள் சம்பந்தமாக தீர்மானம் வழங்குவதற்கு சட்ட ரீதியான தடைகள் நிலவுகின்றமையால் அவ்வாறான விடயங்கள் சம்பந்தமாகவும் தீர்மானங்கள் வழங்குவதற்கு தாமதமாகிய பல சந்தர்ப்பங்களும் உள்ளன.

4.13 சேவைப் பிரமாணக் குறிப்பைத் திருத்தம் செய்தல்

□ அரசாங்க சேவையில் பெரும் எண்ணிக்கையில் சேவைப் பிரமாணக் குறிப்புகளும் ஆட்சேர்ப்புத் திட்டங்களும் இருக்கின்ற போதிலும் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் எடுக்கப்பட்ட புதிய கொள்கை தீர்மானங்கள் மற்றும் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களின் நோக்கில் அவற்றுள் சில விதிப் பிரமாணங்களும்∴ ஆட்சேர்ப்பு நடைமுறைகளும் தற்போது காலத்துக்கு ஒவ்வாதவைகளாகியுள்ளன. அதே போன்று மேலே சகல பிரமாணங்களும் 2006 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் ''அரசாங்க சேவையில் சம்பளங்கள் மீள்கட்டமைத்தல்'' எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட இலங் 06.∴2006 கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இருக்கும் விதத்தில் திருத்தம் செய்யப்பட்டு மீண்டும் வெளியிடப்பட வேண்டிய தேவைப்பாடும் கடந்த சில வருடங்களாக உரிய கவனம் செலுத்தப்படாமல் இருந்துள்ளது.

2001ஆம் ஆண்டுக்கு முன்னர் தொட்டு அரசாங்க நிருவாக அமைச்சின் கீழ் செயற்படும் தாபனப் பணிப்பாளர் நாயகத்தினால் நிறைவேற்றப்பட்ட விடயப் பொறுப்புகளுள் பெரும்பாலானவை, விசேடமாக ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் சேவைப் பிரமாணங்கள் சம்பந்தமாக செயற்படுதல் 17ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் 3 ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளவாறு புதிதாக ''தாபனப் பிரிவொன்று'' அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலகத்தினுள் அமைக்கப்பட்டதன்

மூலம் இந்த விடயம் சம்பந்தமாக வெற்றிகரமான தீர்வுகள் செய்யக் கூடியதாக உள்ளது.

5. 2008 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரை காலப்பகுதியில்

ஆணைக் குழுவினால் ட்ட நடவடிக்கைகள் பற்றிய விபரம் நிறைவேற்றப்ப

2008 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில்

ஆணைக்குழுவிற்கு கிடைத்த பதவி நிலைப் பதவிகள் சம்பந்தமாக

பல்வேறு வேண்டுகோள்களுடனான கடிதங்கள், இடமாற்றங்கள், பதவியுயர்வுகள் சம்பந்தமாக கிடைக்கப் பெற்றிருந்த வேண்டுகோள் கடிதங்கள், பதவி நிலைத் தரங்களுக்குரிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்வதன் பொருட்டு கிடைக்கப் பெற்ற கடிதங்கள் மற்றும் பதவி நிலை அல்லாத தரங்களிலுள்ள உத்தியோகத்தர்கள் சமர்ப்பித்திருந்த மேன்முறையீட்டுக்கடிதங்கள் சம்பந்தமாகவும் 2008 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டன.

இங்கு நிருவாகப் பிரிவு, மேன்முறையீட்டுப் பிரிவு, நியமனப் பிரிவு, மற்றும் ஒழுக்காற்று பிரிவு மூலம் தாபன நடவடிக்கை மேற்கொள்ளப்படும் போது பாரிய விடயப் பொறுப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

6. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் செய்யப்படும் நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் சம்பந்தமான நடவடிக்கைகள்

இவ்வருடத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்பட்ட விடயங்கள் பற்றிய விபரம் ஒன்று கீழே சுருக்கமாக காண்பிக்கப்பட்டுள்ளது.

6.2 புதிய நியமனங்கள்

2008.01.01 தொடக்கம் 2008.12.31 வரையிலான மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் அகில இலங்கைச் சேவைகள் மற்றும் பல்வேறு அமைச்சுக்கள்.திணைக்களங்களில் உள்ள பதவி நிலை தரங்களின் கீழ்வரும் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளன.

திறந்த அடிப்படையில் (பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகள்) 1366 மட்டுப்படுத்தப்பட்ட.திறமை அடிப்படையில் 374 அதன் பிரகாரம் மொத்த ஆட்சேர்ப்பு எண்ணிக்கை 1740

(இணைப்பு 2 மற்றும் படம் 01 ஐ பார்க்கவும்)

6.2 பதீறகடமை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிப்பு

தகைமைபெற்ற உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையின் நிமித்தம் பதவிநிலைத்தர பதவிகளின் வெற்றிடங்கள் 361க்கான பதில் கடமை நியமனங்கள் வழங்குவதற்கு 2008 ஆம் ஆண்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளன. (இணைப்பு 3 மற்றும் படம்

02 ஐ பார்க்கவும்)

6.3 ஓய்வு பெற்ற அராசாங்க உத்தியோகத்தர்களை அடிப்படை ஒப்பந்த யில் நியமித்தலும் ப்புகள் வழங்கலும் சேவை நடி

2008.01.01 தொடக்கம் 2008.12.31 வரையிலான காலப்பகுதியில் பின்வருமாறு நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் 85

ஏனைய அகில இலங்கை சேவைகளின் 43

உத்தியோகத்தர்கள்
திணைக்கள ரீதியான 124
பதவிநிலைதரத்தின்
உத்தியோகத்தர்கள் 277
அமைச்சுக்கள் மற்றும்
திணைக்களங்களின் கீழ்
ஏனைய
உத்தியோகத்தர்கள்
அதன் பிரகாரம் மொத்த நியமிப்புகள் 529
(இணைப்பு 4 மற்றும் படம் 03 ஐ பார்க்கவும்)

57 வயதுக்கு அப்பால் சேவை 4217
நீடிப்பு வழங்கள் (இணைப்பு 5
மற்றும் படம் 04 ஐ பார்க்கவும்)

6.4 பதவியுயர்வுகள்

2008 ஆம் ஆண்டில் அரசாங்க சேவையில் உள்ள பதவிநிலை பதவிகளுக்கான பதவியுயர்வுகள் 2478 அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ளன. (இணைப்பு 6 மற்றும் படம் 05 ஐ பார்க்கவும்)

6.5 சேவையில் உறுதிப்படுத்தலும் வினைத்திறன்காண் தடையிலிருந்து விலக்களித்தலும்

அரசாங்க சேவையில் பதவிநிலை தரத்தின் பதவிகளின் தகுதிகூர் காலத்துக்கு அமைவாக இருந்த 1280
உத்தியோகத்தர்கள் 2008 ஆம் ஆண்டில்
அரசாங்க சேவை ஆணைக்குழுவினால்
உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறே உரித்துடைய
சேவை பிரமாணங்களுக்கும் சுற்றறிக்கைகளுக்கும்
அமைவாக உரிய வினைத்திரமைகாண
தடைப்பரீட்சைகளில் விடுவிக்கப்பட்ட பதவிநிலை
தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை
இவ்வருடத்தில் 85 ஆக
இருந்தது. ம் படம் 06.07 ஐ பார்க்கவும்)
(இணைப்பு 7 மற்று

6.6 சேவையில் இருந்து பதவி விலகல்களும் விடுவிப்புகளும் ஓய்வு பெறல்களும்

2008 ஆம் ஆண்டில்பின்வருமாறு சேவையில் இருந்து
பதவி விலகல்களும்
விடுவிப்புகளும் ஓய்வு பெறல்களும் அரசாங்க
சேவை ஆணைக்குழுவினால்
அங்கீகரிக்கப்பட்டது.

அரசாங்க சேவையில் இருந்து பதவி
விலகிய பதவி நிலை உத்தியோகத்தர்கள்
88 அரசாங்க
சேவைக்கு வெளியே பதவிகளுக்கு

நிரந்தரமாக விடுவிக்கப்பட்ட எண்ணிக்கை

124 அரசாங்கசேவைக்கு

வெளியே பதவிகளுக்கு தற்காலிகமாக

விடுவிக்கப்பட்ட எண்ணிக்கை

136 கட்டாய வயதின் மீது 60 வயதில்

ஓய்வு பெற்ற பதவி நிலை

உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 1778

(இணைப்பு 08 மற்றும் படம் 08.∴09.∴10
ஐ பார்க்கவும்)

6.7 பதவி நிலை ட்ட மேன்முறையீடுகள்
உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்ப

2008 ஆம் ஆண்டில் பதவி நிலை தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு 126 மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பல்வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களில் உள்ள நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களினாலும் 115 மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(இணைப்பு 09 மற்றும் படம் 11ஐ பார்க்கவும்)

8.8 விடுவிப்பு உற்பட்டதாக பல்வேறு நடவடிக்கைகள் பதவிகளுக்கு

2008 ஆம் ஆண்டில் பல்வேறு பதவிகளுக்காக விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 31 ஆக இருந்ததுடன் மாகாண சபைகளுக்காக விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 139 ஆக இருந்தது. அரசாங்கநிருவாக சுற்றறிக்கை 24.்.2007இன் பிரகாரம் சேமிக்கப்பட்ட விடுமுறைக்காலத்தின் பிரகாரம் சேவை நீடிப்புகள் 85 ம் வழங்கப்பட்டுள்ளன. (இணைப்பு 10 ஐ பார்க்கவும்)

8.9 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களுகக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகள்

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களினால் அதிருப்திஅடைந்த பதவி நிலை மட்டத்தில் உள்ள 57 உத்தியோகத்தர்கள் நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபைக்கு மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் உயர் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருந்த வழக்குகளின் எண்ணிக்கை 49 ஆகும். இதற்கு மேலதிகமாக மேன்முறையீட்டு ீமன்றத்துக்கு 14 வழக்குகளும் நிருவாக நடவடிக்கைபற்றிய பாராளுமன்ற ஆணையாளருக்கு 12 சமர்ப்பிப்புகளும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதேபோன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களைச் சவாலுக்கு உட்படுத்தி பதவி நிலை மட்டத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு 52 முறைப்பாடுகளும் பொது மனுக்குழுவுக்கு 08 முறைப்பாடுகளும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. (இணைப்பு 11 ஐ பார்க்கவும்)

8.10 கல்விச் சேவை குழுவின் எஞ்சிய பணி

தேவையான தகவல்கள் கிடைக்காமையினால் எஞ்சிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் போன அமப.˙.01.˙.1769.˙.010.˙.004 மற்றும் 2001.10.12 ஆம் திகதியுடைய அமைச்சரவை தீர்மானத்தினால் விதந்துரைக்கப்பட்ட 32 சலுகைகள் சம்பந்தமான தகவல்கள் 2008 ஆம் ஆண்டிலும் கிடைக்கவில்லை ஆதலால், அது பற்றி அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அமப.˙.07.˙.0646.˙.316.˙.027 மற்றும் 2007.05.09 ஆம் திகதியுடைய அமைச்சரவை தீமானத்தினால் விதந்துரைக்கப்படபட்ட சலுகைகள் பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு தீர்மானம் எடுப்பதற்கு போதுமான விடயங்கள் எதுவும் கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு இலக்கம்

694.07 இனால் 2001.10.03 ஆம் திகதிக்கு பின்னர் அரசாங்க சேவையில் நியமிப்புகள்மற்றும் பதவிஉயர்வுகள் ஆகியவற்றின் அதிகாரங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதனால், அவ்வாறான விடயங்கள் பற்றி அமைச்சரவையினால் எடுக்கப்படும் தீர்மானங்களில் செல்லுபடியாகும் தன்மை இல்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளதன் காரணமாக உரித்துடைய விதப்புரைகள் செயற்படுத்தப்படுவதற்கு ஏற்பாடுகள் இல்லை என அமைச்சரவைக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 17 வது அரசியல் அமைப்பு திருத்தத்தின் பின்னரும் அரசியல்பழிவாங்கல்நடைபெற்றுள்ளதென அமைச்சரவைக்கு விதந்துரைக்கப்பட்டு இருந்த சலுகைகள் அவ்வாறு அந்த விதந்துரைக்கப்பட்ட குழுவினால் சரியானதும் நியாயமானதுமான ஆய்வுகள் இன்றி ள்ளதென செய்யப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு தெரியவந்துள்ளது. அரசியல் பழிவாங்கல் காரணமாக இடமாற்றம் கிடைக்கப்பெற்றதென குறிப்பிடப்பட்டிருந்த அனேகமான ஆசிரியர்களுக்கு அரசியல் பழிவாங்கல் சலுகை விதந்துரைப்பு குழுவினால் கல்வி நிருவாக சேவையில் அல்லது இ க அதிப சேவையில் அ துபதவி லங நியமனம் ஒன்று லல் உயர்வு ஒன்று ன் விதந்துரைக்கப்பட்டு இருத்தல் இங்கு விசேட அவதானிப்புக்கு உற்பட்ட விடயம் ஒன்றாகும்.

9 ஆணைக்குழுவினால் ப்படும் ாற்று நடைமுறைகள் நடைமுறைப்படுதத ஒழுகக

திை ளத் தலைவர்களின் மூலம் அல்லது அமைச்சு ணைக செயலாளர்களின் மூலம் க்

செய்யப்படும் ஆரம்ப பரிசோதனைகளுக்கு உரித்துடையதாக மத்திய அராசாங்கத்துக்குரிய சகல பதவி நிலை உத்தியோகத்தர்களினதும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்று பிரிவின் மூலம் செய்யப்படும். ஆரம்ப பரிசோதனை அறிக்கை ஒன்று ஒழுக்காற்று பிரிவுக்கு கிடைத்த பின்னர் அவை பற்றிய உரிய ட்டு ஆய்வு மேற்கொள்ளப்ப உரித்துடைய அவதானிப்புகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் வகை கூறக்கூடிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை அனுப்பப்படுதல் அல்லது அனுப்பப்படாமல்

இருத்தல் பற்றி தகுந்த தீர்மானம் ஒன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும். குற்றப்பத்திரிகை ஒன்று

வழங்கப்படுவதற்கு தீர்மானிக்கப்படின் அந்த குற்றப்பத்திரிகை உரித்துடைய உத்தியோகத்தருக்கு அமைச்சின் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவரின் ஊடாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அந்த குற்றப் பத்திரிகைக்கு குற்றம் சாட்டப்பட்ட உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்படும்பதில்,

உரித்துடைய திணைக்களத் தலைவரின் அல்லது அமைச்சின் செயலாளரின் அவதானிப்பு மற்றும் விதப்புரைகள் கவனத்திற்

கொள்ளப்ட்டு முறையான ஒழுக்காற்று பரிசோதனை ஒன்று நடாத்துதல் அல்லது

நடாத்தப்படாமல் இருத்தல் பற்றிய தீர்மானம் எடுக்கப்படும்.

முறையான ஒழுக்காற்று விசாரணை ஒன்று நடாத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்படின் அதற்கு அராசாங்க சேவை அணைக்குழுவினால் நடாத்தப்பட்டு வரும் விசாரணை உத்தியோகத்தர்களின் தொகுப்பில் இருந்து தகுதியான உத்தியோகத்தர் ஒருவர் விசாரணை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டு அந்த முறையான ஒழுக்காற்று விசாரணையைச் செய்யுமாறு பணிக்கப்படும். ஏதேனும் காரணத்தினால் முறையான ஒழுக்காற்று விசாரணை ஒன்று நடத்தப்படாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டால்குற்றம் சாட்டப்பட்ட உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட பதில் மற்றும் அதுசம்பந்தமாக திணைக்களத் தலைவரினால் அல்லது உரித்துடைய அமைச்சின் செயலாளரின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகளை அடிப்படையாக கொண்டு குற்றம் சாட்டப்பட்ட உத்தியோத்தர் சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவித்தல் அல்லது தகுதியான தண்டனை ஒன்று விதித்தல் செய்யப்படும்.

முறையானஒழுக்காற்று விசாரணை ஒன்று நடாத்தப்பட்டிருப்பின் அந்த விசாரணை அறிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு கிடைத்த பின்னர் அந்த முறையான ஒழுக்காற்று விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்ட சகல வாய் மூல மற்றும் எழுத்து மூல சாட்சிகள் கவனத்திற் கொள்ளப்பட்டு குற்றம் சாட்டப்பட்ட உத்தியோகத்தர் சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டால் அல்லது ஒரு குற்றச்சாட்டுக்கு, சில குற்றச்சாட்டுகளுக்கு அல்லது குற்றச்சாட்டுகள் அனைத்துக்கும் குற்றவாளி ஆக்கப்பட்டு தகுதியான ஒழுக்காற்று கட்டளையொன்று அராசங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும்.

மேலும் ஒழுக்காற்று நடைமுறைகளின் பகுதியொன்றாக ஏதேனும் குற்றம் சாட்டப்பட்டஉத்தியோகத்தர் ஒருவர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்படல்அல்லது அவ்வாறான சேவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவர் மீண்டும் சேவையில் அமர்த்துதல் அல்லது கட்டாய லீவில் இருத்துதல். அல்லது முடிவடையாத ஒழுக்காற்று விடயங்கள் நிலவும் போது உரித்துடைய உத்தியோகத்தர் ஓய்வு பெறுவாராயின் குறித்த ஓய்வு பெறச் செய்தல் ஓய்வூதிய பிரமாணக்குறிப்பின் 12வது உறுப்புரைக்கு உட்படுத்தப்பட்டு செய்யப்படடும்.

மேற்குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக சேவையை விட்டு விலகும்கட்டளைக்கு எதிராக பதவி நிலை உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்படும் மேம்முறையீடுகள் கவனத்திற் கொள்ளப்பட்டு அந்த உத்தியோகத்தர்கள் தகுதியானவாறு மிண்டும் சேவையில் அமர்த்தப்படல் ∴ அமர்த்தப்படாமல் இருத்தல் செய்யப்படும்.

மேலும், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஒழுக்காற்று கட்டளைகளுக்கு அல்லது அவ்வாறான ஒழுக்காற்று

நடவடிக்கைகள் பற்றிய தீர்மானங்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் நிருவாக

மேன்முறையீடுகள் நியாய சபைக்கு சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள், மனித உரிமைகள் ஆணைக்குழு பாராளுமன்ற பொது மனுக்குழு, குறைகேள் அதிகாரி ஆகியோருக்கு சமர்ப்பிக்கப்படும்

மேன்முறையீடுகள் சம்பந்தமாகவும் அரசாங்க சேவை ஆணைக்குழு தகுதியான முறையில் நடவடிக்கை எடுக்கும்.

ஒழுக்காற்று பிரிவுக்கு கிடைக்கப்பெறும் சகல ஆவணங்கள் பற்றி விரிவான முறையில் விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டு பக்கச்சார்பற்ற தீர்மானம் எடுக்கப்படுவதற்காக சிக்கல் இன்றி, அந்த விடயங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல் ஒழுக்காற்று பிரிவினர் விடயப் பொறுப்பாகும். மேற்கூறப்பட்ட விடயப் பொறுப்பைநிறைவேற்றும் போது அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களின் உதவியும் பெற்றுக் கொள்ளப்பட்டு முன்னுரிமை விடயப் பொறுப்பொன்றை நிறைவேற்றுதல் சிரேஷ்ட உதவிச் செயலாளர் உட்பட்டதாக உதவி செயலாளர்கள் எனக் காண்பிக்கப்படுவதுடன் அவர்களில் ஒருவருக்கு கடந்த காலப்பகுதியில் 200க்கும் அதிக எண்ணிக்கையான கோவைகள் பற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. ஒழுக்காற்று நடவடிக்கை போன்ற மிகவும் கவனமாகவும் ஆழமாகவும் விடயங்களை ஆய்வு செய்வதற்குரிய விடயத்துறையொன்று சம்பந்தமாக ஒரு உத்தியோகத்தருக்கு இவ்வாறான பெருந்தொகையைக் கொண்ட கோவைகளின் நடவடிக்கைகள் நிறைவேற்றுதல் உசிதமானதல்ல என்பதனால் இவ்வருடத்தில் ஒழுக்காற்று பிரிவின் பணிக்குழுவினர்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது இனங்காணப்பட்ட மேலதிக பணிக்குழுவினரின் தேவைப்பாட்டில் அரைப்பங்கு மட்டில் 2008 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் பூரணப்படுத்தப்பட்டுள்ளதனால் மீளாய்வுக்கு உற்பட்ட ஆண்டில் ஒழுக்காற்று பிரிவு முன்னைய ஆண்டுகளை விடவும் கூடுதலான முன்னேற்றம் காண்பிக்கக்கூடியதாக இருந்தது.

அவ்வாறே ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்பின் 17 வது திருத்தம் பற்றி சில திணைக்களங்களிலும் அமைச்சுக்களிலும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் அறியாமை காரணமாகவும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தாமதமின்றி நிறைவேற்றப்படுவதற்கும் தடைகள் ஏற்படும் என்பது கணிடறியப்பட்டுள்ளது. இதன் காரணமாக பயிற்சிப் பட்டறை, சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் போன்றவை நடாத்தி அவர்கள் அறிவுறுத்தப்படும் தேவைப்பாடு இவ்வாணைடிலும் மேலும் மாற்றங்கள் எதுவும் இன்றி நடாத்தப்பட்டன.

அவ்வாறே முறையான ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்படும் விசாரணை உத்தியோகத்தர்களுக்கு உரித்துடைய கொடுப்பனவுகள் இது வரை உரித்துடைய அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்களினால் செய்யப்பட்டது. எனினும் குறிப்பிட்ட கொடுப்பனவுகள் செலுத்தப்படும் போது அவசியமற்ற தாமதங்கள்ஏற்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டு இருந்தது என்பதனால் அந்த கொடுப்பனவுகள் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் அரசாங்க சேவை ஆணைக்குழு

அலுவலகத்தின் ஊடாக செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்டது.

ஒழுக்காற்று பிரிவின் மூலம் 2008 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட விடயப் பொறுப்புகள் பற்றிய விபரம் இணைப்பு 12 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

10 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மேன்முறையீடுகள் சம்பந்தமான செயற்பாடுகள்

8.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குச் றையீடுகள் சமர்ப்பிக்கப்படும் மேனமு

அரசியலமைப்பின் 58(1) ஆம் பிரமாணத்தின் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள குழுவொன்றினால் அல்லது உத்தியோகத்தரினால் விடுக்கப்படும் கட்டளையினால் அதிருப்தியடையும் யாரேனும் உத்தியோகத்ரொருவருக்கு அந்த கட்டளைகளுக்கு எதிராக அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறே 58 (2) ஆம் உறுப்புரையின் மூலம் அவ்வாறான மேன்முறையீடொன்று கிடைக்கும் போது அது பற்றி விசாரனை செய்து அக்கட்டளையை இரத்துச் செய்யவோ அல்லது மாற்றம் செய்வதன் மூலம் அரசாங்க உத்தியோகத்தருக்கு நிவாரணமளிக்கும் அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாடுகளுக்கு அமைவாக அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து பெரும்தொகையான மேன்முறையீடுகள் ஆணைக்குழுவிற்குச் சமர்பிக்கப்பட்டு வருகின்றன. 2007ஆம் ஆண்டின் இறுதியில் அவ்வாறு கிடைக்கப்பெற்ற 844 மேன்முறையீடுகள் சம்பந்தமாக நடவடிக்கை துடன் எடுக்கப்பட்டு வந்துள்ள , இவ்வருடத்தில் மேலும் 477 மேன்முறையீடுகள் இருந்தன. அதன் பிரகாரம் 2008 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த மொத்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 1321 ஆகவிருந்தது. இந்த வருடத்தில் ஆணைக்குழுவினால் 758 மேன்முறையீடுகள் விசாரணை செய்யப்பட்டு அவற்றுக்கான தீர்மானங்கள் வழங்கப்பட்டுள்ளன. வருட இறுதியாகும் போது மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருந்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 563 ஆகவிருந்தது. (இணைப்பு 13 ஐப் பார்க்கவும்).

அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகள் சம்பந்தமாக ஆணைக்குழுவிற்குத் தீர்மானங்கள் எடுக்கக் கூடியதாக இருப்பதானது மேன்முறையீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றி உரித்துடைய திணைக்களங்களிடமிருந்து அல்லது அமைச்சுக்களிடமிருந்து அறிக்கையொன்று மற்றும் தொடர்புடைய சகல ஆவணங்களும்

பெற்றுக்
கொள் ட்டதன் பின்னராகும். அவ்வாறு
ளப்ப கோரப்படும் அறிக்கைகள் மற்றும்
ஆவணங்கள் துரிதமாக சமர்ப்பிக்கப்படாமை
காரணமாக மேன்முறையீடுகள் சம்பந்தமாக
தீர்மானங்கள் வழங்கப்படுவதில் பெரும்பாலும்
தாமதங்கள் ஏற்படுகின்றன. இந்தத்
தாமதங்களைத் தவிர்ப்பதற்காக ஆணைகுழுவின் அதிகார
எல்லைக்குள் எடுக்கப்படக்கூடிய கருமங்கள்
அனைத்தும் ஆணைக்குழுவினால் எப்பொழுதும்
எடுக்கப்பட்டு வந்துள்ளன.

மேன்முறையீடுகள் சம்பந்தமான நடவடிக்கைகள் மிகவும் வினைத்திறனாக நிறைவேற்றும் நோக்கில் ஆணைக்குழு அவை பற்றி எடுத்திருந்த பின்வரும் தீர்மானங்களை மிகவும் முறைப்படி செயற்படுத்துவதற்கு இவ்வருடத்தில் மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

ஏஐ. திணைக்களத் தலைவருடாக ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படும் முறையான மேன்முறையீட்டுக்குப் புறம்பாக அதன் பிரதியொன்றை நேரடியாக ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கலாம்.

ஏஐஐ. மேன்முறையீடு கிடைக்கப் பெற்றமை பற்றி நேரடியாக மேன்முறையீட்டாளருக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

ஏஐஐஐ. ஆணைக்குழுவின் தீர்மானங்களும் நேரடியாக மேன்முறையீட்டாளருக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

ஐஏ. ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு ஏதுவாகவிருந்த காரணங்களும் தீர்மானங்கள் அறிவிக்கப்படும் கடிதத்தில் சுருக்கமாக குறிப்பிடப்படல் வேண்டும்.

ஏ. ஆணைக்குழுவின் தீர்மானங்களின் மீது திருப்திப்பட முடியாமல் இருப்பின்

2002 ஆம் ஆண்டின் இல: 4 கொண்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபைக்கு மேன்முறையீடொ சமர்ப்பிக்கும் உரிமை னன்று உண்டென்பதனை தீர்மானங்கள் அறிவிக்கப்படும் கடிதத்தில் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேன்முறையீடுகள் சம்பந்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் போது எதிர்கொள்ளப்படும் இன்னுமோர் சிக்கலானது மேன்முறையீடுகள் சமர்ப்பிப்பது பற்றி தாபன விதிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கவனத்திற் கொள் டாமல் தங்களது மேன்முறையீடுகளை ளப்ப சமர்ப்பிப்பதற்கு உத்தியோகத்தர்கள் பழக்கப்பட்டிருத்தலாகும். உதா:

மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்படக்கூடியதானது அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரி ஒருவரினால் செய்யப்பட்டுள்ள

கட்டளையொன்றுக்கு எதிராக மட்டும் எனினும், அவ்வாறான அதிகாரி ஒருவருக்கு சமர்ப்பிக்கப்படாமல் மேன்முறையீடொன்று நேரடியாகவே ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடுகள் பெருந்தொகையானவை சமர்ப்பிக்கப்படுவதும் நடைபெறுகின்றது. அவ்வாறான வேண்டுகோள்கள் சம்பந்தமான நடவடிக்கை எடுப்பதற்கு அராசங்க சேவைஆணைக்குழுவிற்கு சட்டரதியான அதிகாரம் ஒன்று இல்லை ஆதலால் மேன்முறையீட்டு மாதிரியில்

சமர்ப்பிக்கப்படும் அவ்வாறான வேண்டுகோள்களை நிராகரிப்பதற்கும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

